## கிறிஸ்தவ வாழ்வு என்பது துன்பமானதா அல்லது இன்பமானதா? எப்படிப்பட்டது?

**ஒருவர் கிறிஸ்தவராக வாழ்வதென்பது மகிழ்ச்சிக்குரிய வாழ்வா? துன்பத்துக்குரிய வாழ்வா அல்லது இரண்டும் கலந்ததா?**

**H-ஸ்டெல்லா தோமஸ்**

'கிறிஸ்தவர்' என்றால் கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக் கொண்டு, அவரில் நிலைத்து வாழ்தல் என்பது பொருள். கிறிஸ்து இன்றி கிறிஸ்துவம் இல்லை. அப்படியென்றால் கிறிஸ்துவின் மனநிலையே கிறிஸ்தவரின் மனநிலையாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் மனநிலை என்ன? அது உலகப் பற்று அற்ற வாழ்வு. ஆகவே, ஒவ்வொரு கிறிஸ்துவரும் உலகப் பற்று அற்ற வாழ்வுக்குரியவர்கள். உலகப் பற்றை விட்டொழித்தல் அடுத்துக் கிட்டுவது மகிழ்ச்சி.

ஆகவே, ஒருவர் கிறிஸ்தவராக வாழ்வதென்பது மகிழ்ச்சிக்குரிய வாழ்வா? துன்பத்துக்குரிய வாழ்வா அல்லது இரண்டும் கலந்ததா? என்று கேட்டால், 'எனக்கு வாழ்வு என்பது கிறிஸ்துவே' என்று முடிவெடுத்து வாழ்வோருக்கு அது மகிழ்ச்சிகுரியது. இரண்டும் கெட்டான் நிலையில் வாழ்வோருக்கு அது துன்பத்துகுரியது. சாத்தானின் சோதனை இருக்கும் வரை துன்பமும் துயரமும் தொடரும். ஆழ்மனதில் ஆண்டவர் இருப்பாரேயானால், சாத்தானின் சூழ்ச்சியை எளிதில் முறியடிக்கலாம். இத்தகைய வாழ்வைத்தான் தூய பவுல் அடிகளார் போதித்தார்.

கிறிஸ்தவர் என்றுமே மகிழ்ச்சிக்குரியவர். துன்பமும் துயரமும் வந்து போகும். ஆனால், அவரில் உள்ள மகிழ்ச்சி நிலைத்திருக்கும். இயேசுவின் பிறப்பின் போது மகிழ்ச்சிக்குரிய நற்செய்தி நமக்கு அறிவிக்கப்பட்டது. அதே மகிழ்ச்சி இயேசுவின் உயிர்ப்பிலும் தூய ஆவியாரின் வருகையிலும் நிலைநிறுத்தப்பட்டது. "எப்பொழுதும், மகிழ்ச்சியாக இருங்கள். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே" என்கிறார் தூய பவுல் (1தெச.5:16-18). மேலும், "என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன்" என்று இயேசு உறுதியளித்தார். இயேசு உள்ளத்தில் நிறைவாக உள்ளவரை அவருவ மகிழ்ச்சி நிறைவாகக் கிட்டும். ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு காலும் வைத்து வாழ்வோருக்கு துன்பமும் துயரமும்தான் பரிசாக அமையும்.

எனினும் துன்பம் என்பது நமக்குரியது இல்லை என்று சொல்லிவிடவும் முடியாது. துன்பம் வரும்; இறைவனின் தாய் என்று நாம் போற்றும் அன்னை மரியாவும் துன்பத்தை அனுபவித்தார். திருத்தூதர்களும் சீடர்களும் துன்பத்தை அனுபவித்தார்கள். ஆகவே, துன்பம் வரும். ஆனால், அதை மகிழ்ச்சியாக மாற்றுவது, நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை வாழ்வு. இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: "பாவச்சோதனை வருவதைத் தவிர்க்க முடியாது (லூக்கா: 17:1). ஆம், துன்பம் வருவதை தவிர்க்கவோ தடுக்கவோ முடியாது என்பது உண்மை. ஆனால், கடுகளவு நம்பிக்கை இருந்தால் போதும் துன்பம் இன்பமாக மாறும்.

"நீதிமான்களே, ஆண்டவரை முன்னிட்டு அகமகிழுங்கள்; நேரிய உள்ளத்தோரே, நீங்கள் அனைவரும் மகிழ்ந்து பாடுங்கள் (திபா. 32:11) என கூறப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்வோமானால், கிறிஸ்தவர் மகிழ்ந்திருக்க முதலில் நீதிமான்களாக வாழ முற்பட வேண்டும். "ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்; மீண்டும் கூறுகிறேன். மகிழுங்கள்" (பிலி. 4:4). மகிழ்ச்சி என்பது தாமாக கிட்டாது. ஆண்டவரில் இணைந்திருக்க வேண்டும். ஆண்டவரில் இணைந்திருப்போருக்கே மகிழ்ச்சி உரித்தாகும்.

ஆகவே, ஒருவர் கிறிஸ்தவராக வாழ்வதென்பது மகிழ்ச்சிக்குரிய வாழ்வா? துன்பத்துக்குரிய வாழ்வா அல்லது இரண்டும் கலந்ததா? என்றால், எப்போதும் ஆண்டவரில் இணைந்திருக்கும் கிறிஸ்தவரின் வாழ்வுதான் மகிழ்ச்சிக்குரியதாக அமையும்.

- ஆர்.கே.

# சிரியா போரினால் பரிதவிக்கும் அப்பாவி மக்களின் அபாய நிலை



சிரியா போரினால் அழிவுற்றிருக்கும் அடேரிப் நகரம்



போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறி குண்டு வீச்சு தாக்குதல்கள் நடைபெறும் பகுதி

சிரியாவில் நடைபெற்றுவரும் இரத்தம் சிந்தும் சண்டையில் பலியாகும் அப்பாவி மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றவேளை, இந்நிலைமை அந்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக சிறார்களுக்கு, இப்பூமி நரகமாக இருக்கின்றது என்று சிரியா திருப்பீட கர்தினால் மாரியா செனாரி அவர்கள் அண்மையில் கூறினார்.

சிரியாவில் 2011 ஆம் ஆண்டுத் தொடங்கி உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இச்சண்டை தற்போது உச்ச நிலையை அடைந்து இருக்கிறது எனலாம். சிரியாவில் அதிபர் பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியாளர் படை போராடி வருகிறது. சிரியாவில் அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே சண்டை நடைபெற்று வருகிறது. இந்தப் போரினால் ராணுவ தாக்குதல்களினால் ஒவ்வொரு நாளும் பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் என்று நூற்றுக்கணக்கானோர் இறக்கின்றனர். மேலும் இப்போரில் பயன் படுத்தப்படும் ஒருவகை ரசாயான தாக்குதல்களினால் மூச்சு திணரல் ஏற்பட்டு சில நிமிடங்களிலேயே இறக்க நேரிடுகிறது என்பதை கேட்கும் போது மனம் தவிக்கிறது. சமீபத்தில் வளைதளங்களில் பதிவேற்றப்பட்ட ஒரு கோர நிகழ்வு காணொளி. அதில் ரசாயன தாக்குதலுக்கு இலக்கான ஒரு சிறுமி, தனது சுவாச பையை எடுத்து தனது தங்கைக்கு கொடுத்து விட்டு உயிர் துறக்கிறாள். ஒரு சிறுமிக்கு இருக்கும் உயிர்காக்கும் மனநிலைகூட ஏன் அரசாட்சி ஆளும் மனிதருக்கு இல்லை என்று கேட்கத் தோன்றுகிறது.

இப்போரினால் பொது மக்கள் தங்கள் இல்லங்களை இழந்து, உற்றார் உறவினர்களை இழந்து, கணவனை இழந்து, மனைவியை இழந்து, சகோதர-சகோதரிகளை இழந்து, பெற்றக்குழந்தையையும் இழந்து தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மக்களை காக்கும் அரசாங்கமே மக்களை சாகடித்தால் அப்பாவி மக்கள் எங்கு செல்வார்கள்.

ஆரம்பத்தில் இப்போர் ஒரு புரட்சி என்ற அளவில் மட்டுமே இருந்தது. இன்று அது ஒரு பெரிய போராக உருவெடுத்து உள்ளது.

ஐ.நா.வின், யுனிசெப் குழந்தை நல நிறுவனத்தின், சிரியா பகுதியின் இயக்குனர் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையைச் சுட்டிக்காட்டிப் பேசிய, கர்தினால் செனாரி அவர்கள், உலகில் சிறார்களுக்கு மிகவும் ஆபத்தான இடங்களில் ஒன்றாக சிரியா மாறியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவது மிகவும் கொடூரமானது என்றும் கூறியுள்ளார்.

மேலும், போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறி குண்டுவீச்சு தாக்குதல்கள் நடைபெறும் பகுதியில் ஒவ்வொரு நாளும் குறைந்தது 37 அப்பாவி பொது மக்கள் கொல்லப்படுகின்றனர். இரண்டு அவசர மருத்துவ சிகிச்சை வாகனங்கள் தாக்கப்படுகின்றன. மருத்துவப் பணியாளர்கள், மூன்று பேருக்கு ஒருவர் வீதம் காயமடைகின்றனர் என்று 'சேவ் தே சில்ரன்' எனும் பிறரன்பு அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

கடந்த பிரவரி பாதியில் கூட்டா பகுதியில் தொடங்கிய சண்டையில் 600 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 2,000 பேர் காயமடைந்துள்ளனர் என்று நம்பப்படுகிறது.

உலக நாகரீகம் வளர்ந்து வரும் இந்நாள்களில் மனிதாபிமானம் அற்ற இதுபோன்ற செயல்களை பார்க்கும் போது, மனிதன் வளர்ச்சி கண்டது போல தெரியவில்லை. மத்தேயு 25:42-45 இல் இயேசு: பசியாய் இருந்தேன்; ஆடை இல்லாமல் இருந்தே; நோயுற்றிருந்தேன்.... என்றெல்லாம் கூறுவார். ஆனால் தாக்குதலின் பேரில் அனைத்தும் ஒரே இடத்தில் இடம்பெறும் என்றும், தாக்குதலின் போது, மக்கள் சுவாசிக்க நல்ல ஆக்சிஜன் கூட இல்லாமல் போவார்கள் என்று இயேசு அறியார். எனவே, இயேசு சுவாசிக்க ஆக்சிஜன் இல்லாமல் இருந்தேனே எனக்கு சுவாசிக்க காற்றை கொடுத்தாயா என்று கேட்பேன் என்று வினவவில்லை. சுவாசிக்கும் காற்று இறைவனால் மனிதனுக்கு இலவசமாக கிடைக்கும் ஒன்று. அதைக்கூட மனிதர் விட்டுவைக்கவில்லை, மாசு அடைய செய்கிறார்கள். நாகரீகம் வளர்ச்சி அடைந்த இக்காலத்தில் நடைபெறும் கொடூரங்கள் நம் மனதை அளக்கழிக்க வைக்கிறது. சிரியாவில் நடக்கும் கொடுமை நம்மால் படங்களில் கூட பார்க்கும்போது மனம் வலிக்கிறது; மனதை துடிக்க வைக்கிறது; நேரில் காணும்போது எப்படி இருக்கும் என்று எண்ணிப்பார்க்கக்-கூட முடியவில்லை.

அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்! என்பது தமிழ் பழமொழி. பொறுத்திருந்து பார்ப்போம். இப்பேர் பட்ட அநீதியை சிரியா மக்களுக்கு அளிப்போர் மட்டும் என்ன இன்னும் ஆயிரம் ஆண்டு காலமா வாழப்போகிறார்கள்.

உறவினர்களை இழந்து பெற்றோர்களை இழந்து நிம்மதி இல்லாமல் வேதனை படுகின்ற பச்சிளங்குழந்தைகளை பார்க்கும்போது உள்ளம் வேதனைப்படுகிறது. *"இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என நான் உங்களுக்கு உறுதியாக சொல்கிறேன்"* (மத்தேயு 18:20) இல் இயேசு நமக்கு உறுதியளித்திருக்கிறார். எனவே, கிறிஸ்தவர்களாகிய நாம், இந்தத் தவக்காலத்தில் அவர்களுக்காக இறைவனிடம் நம் அன்றாட செபத்தில் வேண்டிக்கொள்வதை தவிர நம்மால் எதும் செய்ய இயலாது. நம்மால் முடிந்ததை அன்றாட செபத்தில் சிரியா மக்களுக்காக ஒப்புக்கொடுப்போம். அவர்களுக்காக கடவுளிடன் மன்றாடுவோம்!

- எஸ்டி ஸ்டீபன்

## என் இறைவா, என் இறைவா, ஏன் என்னை கைவிட்டீர்!

இன்றும் நாம் இயேசுவின் திருப்பாடுகள் ஞாயிறை கொண்டாடுகிறோம். குருத்தோலை கையில் ஏந்தி இறைபுகழ் பாடி இறைமகனை வரவேற்றனர். தங்களுக்கு வாழ்வில் ஒரு நிரந்தர சுதந்திரம் கிடைக்கும். நிலையான வாழ்வு அனுபவிக்கலாம். நமக்காக பரிந்து பேசவும், தேவைகளை பூர்த்தி செய்யவும் ஒருவர் வந்துள்ளார் என அகமகிழ்வோடு சிவப்பு கம்பளம் விரித்து ஆர்ப்பரிப்போடு வரவேற்றனர்.

இதே மக்கள், பின்பு "அவரை சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும்" என கோஷமிட்டனர்.

இந்த இரண்டு மாறுப்பட்ட மனப்பான்மை கொண்ட மக்களின் செயல்களை சற்று ஒப்பிட்டு பார்ப்போமே. முதலாவது நமது நாட்டில் வெகு சீக்கிரமாக பொதுத் தேர்தல் நடைபெறும் எனும் அறிகுறிகள் தென்படுகின்றன. அனைத்து தகவல் ஊடகங்களும் பொதுத்தேர்தல் ஆருடங்களை சுடச்சுட பிரசுரித்து வருகின்றன. அதில் ஒருவரை ஒருவர் தாக்கியும் குற்றம் குறைகளையும் பேசிவருகின்றன. முன்னாளில் அதிகாரத்தில் இருந்த தலைவர்களுடன் உடன் பணி செய்தோர் இன்று வேறு முகாம்களில் இருந்து கொண்டு அவர் என்ன செய்தார் என்று குறை சொல்லி வருகின்றனர். ஆனால், இவரோடு உடன் இருந்து பணி செய்தபொழுது இவரைப்போல் நமக்கு கிடைப்பாரா; இவர் நம் சமூகத்தினர் மீது எவ்வளவு அக்கறை கொண்டு அள்ளி அள்ளி கொடுக்கிறார் என உச்சி புகழ்ந்து மாலை மரியாதைக்கு அளவு இல்லாமல் வாழ்த்தியவர்களே, இன்று அவர் நமக்கு என்ன செய்துவிட்டார் என இகழ்ந்து புறங்கூறுகின்றனர். அதுபோலவே இன்றைய நற்செய்தியில் இயேசுவை புகழ்ந்து பாடியவர்களே பின் மக்களோடு மக்களாக அவருக்கு எதிராக குரல் கொடுத்தனர்.

ஒருவர் நல்நிலையில் அல்லது வளமுடன் இருக்கும்போது, ஆஹா, ஓஹோ என புகழ்வதும், பின் அவரால் நமக்கு எந்தப் பலனும் கிட்டாது என அறிந்ததும் அவரை ஏளனமாய் பேசுவதும், கிண்டலடிப்பதும், அவரை விட்டு பிரிந்து செல்வதும் நாம் அறிந்ததுதானே. இயேசுவையும் இப்படிதான் உடன் இருந்தவர்களே அவரை விட்டு ஓடிவிட்டனர்.

இயேசுவின் இலட்சியப் பயணத்தின் கொள்கையில் மாற்றமோ அல்லது தடுமாற்றமோ இல்லை. எச்சூழலிலும் நிதானத்தை இழக்காமல் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றும் பயணத்தை தொடர்ந்தார்.

நாமும் பல தடவைகளில் நம்மைச் சுற்றி உள்ளவர்களின் ஆசை வார்த்தையில் புகழ்ச்சியில் மெய்மறந்து மகிழ்ச்சியின் உச்சியில் இருந்திருப்போம். பின் நமக்கு ஏற்படும் துன்பம், துக்கம், துயரம், இன்னல்கள், ஏழ்மை, நோய், தனிமை நேரிட்ட நிலையில் நம்மை சுற்றி யார் இருப்பர் எனும் இக்கட்டான நிலையில் இன்றைய குருத்தோலை ஞாயிறை மனதில் வைத்து எல்லாவற்றையும் இறைவனிடம் ஒப்படைத்து, நமது வாழ்வை தொடர யோபுவின் வாழ்க்கையையும் மனதில் நிறுத்தி அடுத்துவரும் உயிர்ப்பு கொண்டாட்டத்திற்கு நம்மை இவ்வாரம் தயார் செய்வோம். **- ஆ.வி.டேவிட்**

## தவக்காலம் 6 ஆம் ஞாயிறு

**எசாயா: 50:4-7**
**திபா: 22:7-8, 16-17, 18-19, 20-23**
**பிலிப்பியர்: 2:6-11**
**மாற்கு: 14:1, 15:47**

**கவனத்திற்கு**

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் வாசகம்: ஆண்டு 2**
**திருபுகழ் மாலை - 4**